## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No.7/2020 | Date : 22.02.2024 | DW 3 |
|---|---|---|
| Name செல்வராஜ் | S/o. **ஆண்டியப்பன்** | |
| Evidence Recorded Time: 11.30 A.M. to 11.32 A.M | | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

பிரதிவாதி என் அத்தை மகன் என்றால் சரிதான். அவர் மனைவி என் சகோதரி ஆவார். எனக்கு முன்பு சாட்சியம் அளித்தவர் என் சித்தப்பாமகன் ஆவார். நான் எதுவும் படிக்கவில்லை. விவசாயம் செய்கிறேன். வழக்கு சொத்து பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வழக்கின் சங்கதி பற்றியும் தெரியுமா என்றால் தெரியும். ராமசாமி சொத்து சம்மந்தமாக குடும்பத்தில பஞ்சாயத்து செய்தோம். ராமசாமி பணத்தை எங்கிருந்து எடுத்து வந்தார் என்பது தெரியாது. பணம் கொடுத்த விபரம் தெரியும். 6 லட்சம் ரூபாய் பணம் கொடுத்தார். எத்தனை கட்டுகள் என்ற தெரியாது. ராமசாமி பணம் ஏதும் கொடுக்கவில்லை என்றாலும் அவர் என் மச்சான் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பணத்தை வாங்கி கொண்டு மறுத்த விசயத்தை காவல்நிலையத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நானும் மாரிகவுண்டரும் சேர்ந்து ராமசாமிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.எனக்கும் மாரிகவுண்டருக்கும் கட்டபஞ்சாயத்து பேசுவது தான் தொழில் என்றால் சரியல்ல. குடும்பத்திற்காக பேசினோம். ராமசாமிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

ஒம்/–DW3

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.